## நகர்மன்ற சாதாரண கூட்டப்பொருள்

2018ம் ஆண்டு ஜீலை மாதம் 25.07.2018 தேதி புதன்கிழமை மாலை 4.00 மணியளவில் கூத்தாநல்லூர் நகராட்சி அலுவலகத்தில் நடைபெறவுள்ள சாதாரண கூட்டத்தில் கீழ்கண்ட பொருள்கள் பரிசீலனைக்கு வைக்கப்படுகிறது.

**பொருள் எண் 1**

நகராட்சி ஆணையர் அவர்களது ஜீன் 2018 மாத நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு :- பதிவு செய்யலாம் (ந.க.எண். 2105/2011/சி1)

**நகர் மன்ற தீர்மானம் எண் :- 354** **நாள் 25.07.2018**

**அலுவலக குறிப்பு :- அனுமதிக்கப்பட்டது**

**பொருள் எண் 2**

நகராட்சி பொறியாளர் அவர்களது ஜீன் 2018 மாத நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது

அலுவலக குறிப்பு :- பதிவு செய்யலாம் (ந.க.எண். 2105/2011/சி1)

**நகர் மன்ற தீர்மானம் எண் :- 355** **நாள் 25.07.2018**

**அலுவலக குறிப்பு :- அனுமதிக்கப்பட்டது**

**பொருள் எண் 3**

கூத்தாநல்லூர் நகராட்சி பகுதி மக்களின் குடிநீர் தேவையினை பூர்த்தி செய்திட கூத்தாநல்லூர் நகராட்சியில் அலுவலக பின்புறம் உள்ள மேல்நிலை நீர்தேக்க தொட்டி ஒன்றும், மேல்கொண்டாழியில் ஒரு நீர்தேக்க தொட்டி என இரண்டு மேல்நிலை நீர்தேக்க தொட்டிகள் மூலம் இரண்டு மண்டலங்களாக பிரிக்கப்பட்டு தினசரி 2.29 MLD குடிநீர் பொதுமக்களுக்கு 90 LPCD என்ற அடிப்படையில் வழங்கப்பட்டு வருகிறது. மேலும் இந்நகராட்சியில் மொத்தமுள்ள 7469 குடியிருப்புகளில் 2029 குடிநீர் இணைப்பு வழங்கப்பட்டுள்ளது. மீதமுள்ள 3900 குடியிருப்புகளுக்கு புதியதாக குடிநீர் இணைப்புகள் வழங்கும் பணிக்காக TUFIDCO மூலம் வட்டியில்லா கடனாக ரூ.133.00 இலட்சத்திற்கு பணி மேற்கொள்ள நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களின் நிர்வாக அனுமதி பெறப்பட்டுள்ளது.

மேலும் 29.06.2018 அன்று நடைபெற்ற ஆய்வுக்கூட்ட நடவடிக்கையில் நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்கள் அறிவுறுத்தியதற்கிணங்க அனைத்து பகுதிகளுக்கும் தினமும் சீரான குடிநீர் வழங்க ஏதுவாக தற்போதுள்ள குடிநீர் விநியோக முறையை (Distribution System) சரி செய்து அனைதது பகுதிகளுக்கும் ஒரே மாதிரியான குடிநீர் அழுத்தத்துடன் கூடிய விநியோக முறையாக (District Metering Area) மாற்றி அமைக்க கலந்தாலோசகர் நியமித்து விரிவான திட்ட அறிக்கை தயார் செய்யவும். மேலும் இதற்கான செலவினத்தை Project Development Grant Fund (PDGF) அல்லது (Project Preparation Fund (PPF) நிதியில் கீழ் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு

மன்றம் அனுமதிக்கலாம்

(ந.க.எண். 518/2018/இ1)

**நகர் மன்ற தீர்மானம் எண் :- 356** **நாள் 25.07.2018**

**அலுவலக குறிப்பு :- அனுமதிக்கப்பட்டது**

பொருள் எண் 4

பாராளுமன்ற உறுப்பினா் உள்ளூா் தொகுதி மேம்பாட்டு திட்டம் 2018–2019ன் கீழ் இந்நகராட்சிக்குட்பட்ட பெரிய பள்ளிவாசல் அருகில் உயா் கோபுர மின்விளக்கு அமைக்கும் பணிக்கு 24.07.2018 தேதி அன்று கோரப்பட்ட ஒப்பந்தபுள்ளியில் கீழ்கண்ட ஒப்பந்ததாரா்களிடமிருந்து இரண்டு ஒப்பந்தபுள்ளிகள் கீழ்கண்டவாறு வரப்பெற்றுள்ளது.

| வ.எண். | ஒப்பந்ததாரா் பெயா் | மதிப்பீடு தொகை | சதவிகிதம் |
|---|---|---|---|
| 1 | சந்தோஷ் சோலாா் சிஸ்டம் மயிலாடுதுறை | 8,50,000 | 0.01% மதிப்பீட்டைவிட குறைவு |
| 2 | பகவதி சோலாா் சிஸ்டம் மயிலாடுதுறை | 8,50,000 | 0.04 % மதிப்பீட்டைவிட அதிகம் |

மேற்கண்டவாறு பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தபுள்ளிகளில் வரிசை எண் 1ல் உள்ள சந்தோஷ் சோலாாி சிஸ்டம் என்ற நிறுவனத்திடமிருந்து வரப்பெற்ற ஒப்பந்தபுள்ளி குறைவாக உள்ளது. மன்றத்தின் பாா்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு

பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தபுள்ளிகளில் வரிசை எண் 1ல் உள்ள சந்தோஷ் சோலாா் சிஸ்டம் என்ற நிறுவனத்திடமிருந்து வரப்பெற்ற ஒப்பந்தபுள்ளி குறைவாக உள்ளதால் மன்றம் ஏற்கலாம்.
(ந.க.எண். 484/2018/இ1)

நாள் 25.07.2018

நகா் மன்ற தீா்மானம் எண் :- 357

அலுவலக குறிப்பு :- அனுமதிக்கப்பட்டது

ஒம் / திரு. சோ.புவனேஸ்வரன் (எ) அண்ணாமலை
தனி அலுவலா் / ஆணையா்
கூத்தாநல்லூா் நகராட்சி

/ உண்மை நகல் /

ஆணையா்
கூத்தாநல்லூா் நகராட்சி